முடியும். ஆனால், தீர்ப்பு ஒன்று இறுதியான நிலைக்கு வந்த பிறகுதான், இதற்குத் திட்டவட்டமான முடிவுகளை எந்த அரசாக இருந்தாலும் எடுக்க முடியும். அதற்கிடையில் என்ன செய்வது என்பதில், சில விஷயங்களில் இந்த அரசு சில நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதை நான் விளக்கமாக இந்த அவையில் நாட்டு நலனைக் கருதிச் சொல்லக்கூடாது.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் சார். உட்காருங்கள் முதலில். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்து இரண்டாவது முதல் அறுபத்து ஏழாவது வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் ஏழாவது முதல் பன்னிரண்டாவது வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2007–2008 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் பத்தொன்பதாவது முதல் இருபத்து நான்காவது வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.